உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணிமாதம் 28-ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹூ ஆடிமீ உருவ (1946 ஆகஸ்ட் 9 வெள்ளிக்கிழமை) [இல நஈ

# இலங்கைமக்கள் தயாராயிருக்கின்றனரா?

## வரப்போகும் உலக மாற்றங்கள்

### காலச்சக்கர வேகத்தில் அகப்படும் இலங்கை காலத்துக்குத் தக்க கருமம் வேண்டும்

### புது அரசியலில் இலங்கையர் கடமை

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

**ஓர் நெருக்கடிக்காலம்**

இன்று இலங்கைத் தமிழ் மக்களுக்கு நெருக்கடியான காலம், ஓர் சோதனைக்காலம் என்று கூறினும் பொருந்தும். காலச்சக்கரம் வெகு வேகமாகச் சுழன்றுகொண்டு போகிறது. இந்தச் சுழற்றில் சின்னஞ்சிறிய இலங்கையும் சேர்ந்து உலக முன்னேற்றத்திற் பங்குபற்றவேண்டும். நாம் விரும்பினால் என்ன, விட்டால் என்ன, இந்த இலங்கையின் முன்னேற்றத்தில் அகப்பட்டு அதிற் பங்குபற்றி எம் வாழ்க்கையை அதற்குத் தக்கதாக அமைக்கவேண்டிய ஓர் சந்தர்ப்பம் இன்று நேர்ந்திருக்கிறது. அரசியல் விஷயத்தில், பொருளாதாரத் துறையில், ஏன், சமயவிஷயத்தில்தானும் நேரும், நேரவிருக்கும் மாற்றங்களையும், புரட்சிகளையும் நாம் எதிர்பார்த்து, அவற்றிற் கொள்ளவேண்டியவற்றைக் கொண்டு, தள்ளவேண்டியனவற்றைத் தள்ளி, எம் வாழ்க்கை நிலையை அமைக்கவேண்டியது, உலகம் அடைந்துவரும் தீவிர மாறுதல்களில், நாம் பழைய கொள்கைகளையும், பழைய ஐதிகங்களையும், பழைய விஷயங்களையுந்தான் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்க முடியாது. பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று நன்னூலாசிரியர் செய்துள்ள உபதேசம் இச்சந்தர்ப்பத்திற் சாலப் பொருத்தமுடைத்தாகும்.

○

**அரசியற் பிரச்சினைகள்**

அரசியல் விஷயமாக இப்போது உலகில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகியிருக்கிறது. இப்போது நடந்து முடிந்துபோன யுத்தம் ஓர் பெரிய உண்மையைத் துலாம்பரமாகக் காட்டியிருக்கிறது, உலகிலே மக்களாய்ப் பிறந்துள்ளார் அனைவரும் சுயராச்சியத்தையுஞ் சுதந்திரத்தையும் பிறப்புரிமையாக உடையவர்; ஆளும் சாதியார் ஆளப்படும் சாதியார் என்ற பத்தாம் பசலிக் கொள்கைகள் இனியும் உருப்படியாக முடியாது என்று உலக மக்கள் யாவரும் விழிப்படைந்து விட்டனர். இதனை இதுகாறும் தாமே ஆளும் சாதியார் எனப் பெருமிதங் கொண்டு இறுமாப்படைந்திருந்த ஒருசில சாதியார் உணர்ந்துவிட்டனர். உலகமக்களிடையே பொங்கி வழியும் சுதந்திரப் பெருக்கை இனியுந் தடுக்கமுடியாது என்று உணர்ந்துள்ள அவர்கள் தாம் வகித்திருந்த அதிகாரங்களைத் தாமாகவே கைவிட்டுத் தத்தம் ஜென்ன நாடுகளுக்குத் தம் மூட்டை முடிச்சுக்களுடன் சிந்தா யாத்திரை கட்ட முடிவு செய்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, உலகத்திலே உள்ள மக்களில், எந்தச் சாதியினராக, எந்தச் சமூகத்தாராயினுமாக, இனித் தனித்தியங்க முடியாது என்ற உண்மையையும் உலக மக்கள் உணர்ந்துவிட்டனர். இப்போது நடந்து முடிந்ததைப்போன்ற இன்னோர் கொடிய யுத்தம் உலகில் தோன்றிச் சர்வநாசம் விளைக்காதிருக்கவேண்டுமானால், உலக மக்கள் இனியாவது உஜ்ஜீவிக்க வேண்டுமானால், உலகிலுள்ள தேச எல்லைகள் மறைந்து, உலக சமஷ்டி ஒன்று ஏற்பட்டு, கறுப்பர், வெள்ளையர், நீகிரோவர் என்ற பேதம் ஒழிந்து எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் ஜாதி, எல்லாரும் ஓர் இறைவனின் சேயர் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து ஒருமித்து இயங்கவேண்டும் என்ற ஓர் உண்மையை உலக மக்கள் உணர்ந்து விட்டனர்.

○

**ஆயத்தமா?**

இப்படியான இந்தச் சூழ்நிலையில்தான் இன்று எங்கள் சின்னஞ்சிறு இலங்கை இருக்கிறது. இலங்கை ஓர் சின்னஞ்சிறிய தீவுதான். ஆனால் உலக சமஷ்டியில் அதனைப் புறக்கணிக்க முடியாது. எங்கள் தேகத்தில் உள்ள சிறிய அங்கமாயினுமாக, பெரிய அங்கமாயினுமாக, நம் சரீரத்துக்கு அவை இன்றியமையாததாக இருப்பதுபோல, இச் சின்னஞ்சிறு இலங்கையும் உலக முன்னேற்றத்தில் இன்றியமையாததாய், அதில் பங்குபற்றித் தன் பணியை நிறைவேற்றவேண்டும். எனவே இதுகாறும் "நீலக் கடலதின் மத்தியிலே" ஒதுங்கியிருந்தஇலங்கை சர்வதேச அரங்கத்தில் நின்று கருமம் ஆற்றவேண்டிய காலம் வந்துவிட்டது. இதற்கு இலங்கை இன்று தயாராகவிருக்கிறதா? உலக முன்னேற்றத்துக்குத் தன் பங்கைக் கொடுப்பதற்குஇலங்கை ஆயத்தமாகவிருக்கிறதா? இதனை இலங்கை மக்கள் சிந்திப்பதுண்டா? நாம் விரும்பினால் என்ன, விட்டால் என்ன, எப்படியோ நாம் இந்த உலக சமஷ்டியிற் சேர்ந்து கருமம் ஆற்றவேண்டும். அப்படியான சந்தர்ப்பத்தில் "பேபே" என்று விழிக்காமல் எம்மை நாம் தயார்ப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

○

**இலங்கை அரசியல்**

இன்று இலங்கைக்கு ஓர்வித அரசியல் அமைக்கப்படவிருக்கிறது இந்த அரசியல் பூரணமான சுயராச்சியத்தை எமக்கு அளிக்கவில்லை என்பது உண்மை. ஆனால் இதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாம் ஓர்படி முன்னேறப் பூரண சுவதந்திரம் பெற, வழியிருக்கிறது. இதனை எவரும் ஒத்துக்கொள்ளுதல் வேண்டும். உள்நாட்டு நிருவாகம் முழுவதும் எம்முடைய கையில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய பொருளாதார நிலைமையை, நாம் வேண்டியபடி அமைக்க இந்த அரசியலால் எமக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய பொருளாதார நிலைமையை நாம் வேண்டியபடி அமைக்க இந்த அரசியலால் எமக்கு ஒரு வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. எம் கைத்தொழில்களை விருத்தி செய்ய, எம் விவசாயத்தை மேனிலைப்படுத்த, எம் பொருளாதார நிலைமையை நாம் வேண்டியவாறு அமைக்க, எமக்கு வேண்டிய சமூகச் சீர்திருத்தங்களை நாம் ஆக்க, எமக்குரிய கல்வித் திருத்தங்களைச் செய்ய எமக்கு ஓர் சந்தர்ப்பம் இந்த அரசியல் மூலமாக அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, எமக்கு ஆக

தொடர்ச்சி 6ம் பக்கம்

## பரீட்சை வினாக்கள்

### கல்விப்பகுதி யதிகாரியின் கண்டனம்

ஒத்துழைப்புக் கேட்கிறார்

ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கான வினாப் பத்திரங்கள் எப்படிப் பரகசியமாயின? இது இலங்கை வித்தியா பகுதியாருக்கு ஓர் பெரிய மர்மமாயிருக்கிறது.

மந்திரி கன்னங்கரா இவ்விஷயமாகக் கல்விப்பகுதி அதிகாரி டக்ரர் இயன் சண்டிமன் அவர்களுடன் ஆலோசித்து இது பற்றிய விசாரணையை நடத்தி இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு பொலிஸ் பகுதியாரைக் கேட்டிருக்கிறார். பொலிஸ்பகுதியாரை விட, கல்விப் பகுதியினரும் தாமாகப் புலன் விசாரித்து வருகின்றனர்.

'இவ்விஷயமாக எத்தனையோ பரீட்சார்த்திகளுக்கு வீண் சிரமம் ஏற்பட்டிருப்பதைக் குறித்து நான வருந்துகிறேன் இப்படியான கிருத்திரமம் இனியும் நிகழாமல் இருப்பதற்காக, எம்மாலான சகல முயற்சிகளையும் நாம் செய்வோம் பொதுஜனங்களும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்' என்று கல்வியதிகாரி டக்ரர் சான்டிமன் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

## 1½லட்சம் ரூபா!

### சோடினை செய்ய வேண்டுமாம்!

மந்திரி கோறியாவுக்குக் கல்தா ஏன்?

மந்திரி கொறியா ஓர் வேண்டா மனிதன்: சேனநாயக்காவும அவர்குழுவினரும் அமைக்கும் அரசியல் அரங்கத்தில் மந்திரி கொறியா இடறுகட்டையாக விளங்கக் கூடும். எனவே அவரை அகற்றுதற்காக, ஓர் உத்தியோகத்தைச் சிருட்டித்துக் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் விட மந்திரசபையினர் தீர்மானித்து விட்டனர். இது பிலிப் பிரதிநிதி தகநாயக்காவின் அபிப்பிராயம். இதை அவர் சென்ற செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த அரசாங்கசபைக் கூட்டத்திற் பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டார்.

லண்டனில் உள்ள இலங்கைப் பிரதிநிதியின் காரியாலயத்துக்கான செலவுக்கு 1½ லட்சம் ரூபா வேண்டுமெனச் சென்ற செவ்வாய்க்கிழமை, பிரதம காரியதரிசி ஓர் உபமான்யப் பிரேரணை கொண்டுவந்த போது, மிஸ்டர் தகநாயக்கா மேலே காட்டிய அபிப்பிராயத்தை வெளியிட்டார். இந்த 240,000 ரூபாவில் 90,000 ரூபா வாடகைக்கு; 150,000 ரூபா காரியாலயச் சோடினைக்கும், தளபாடங்களுக்குமாக வேண்டியிருக்கிறது என்று பிரதம காரியதரிசி வியாக்கியானம் செய்தார். ஏழை மக்கள் வரிப்பணமாக இறைக்கும் பணம் போகிற போக்கின் விந்தைதான் என்னே!

## தலையாரியே கள்வன் ஆனால்?

### ஆரோடு நோவது? ஆர்க்குச் சொல்வது? ஐக்கிய சங்கம் ஒன்றின் பிரலாபம்!

அரசாங்கமும் சேர்ந்து அடிக்கிறதாம்

அரசாங்கமே களவெடுத்தால் அதனைத் தடுப்பது யார்? ஆரோடு நோவேம் ஆர்க்கெடுத் துரைப்போம். ஆளும் நீரே அக்கிரமம் செய்தால் என்று களுத்துறையைச் சேர்ந்த பாஸ்டன்கொறளை கிழக்கு ஐக்கிய சபை புலம்புகிறது இந்தச் சபை தனது வருடாந்த அறிக்கையில் அரசாங்கத்தின் ஐக்கியசங்கப்பகுதியின் பாராமுகத்தையும், களுத்துறையில் உள்ள உணவுக் கட்டுப்பாட்டு நிலயத்தின் புரட்டுத்தனத்தையும் கண்டித்துப் பின்வருமாறு அந்த அறிக்கையில் எடுத்துக்காட்டுகிறது.

"எங்கள் ஐக்கியசங்கக்கடைகளுக்கான உணவுப் பொருள்களை உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் நிலயத்திலிருந்து பெற்றுவருகிறோம். ஆனல் அந்த நிலயத்தில் உள்ள அளவுகளோ மிகவும் மோசமானவை அவர்களிடம் அளந்து இங்கே கொண்டுவந்து திருப்பி அளக்கும்போது ஒவ்வொரு முறையிலும் பெருந் தொகையிற் குறைவு ஏற்படுகிறது. இதனை எங்களுக்கு மேலாகவுள்ள ஐக்கியசங்கப் பகுதிக்குப் பன்முறை எடுத்துக்காட்டினோம். அந்தப்பகுதியார் இதுவரை பாராமுகமாகவிருந்து வருகின்றனர். இந்த நிலையில் நாம் ஆருடன் முறையிடுவது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஸ்ரீ
ஆடிமீ உஉவ வெள்ளிக்கிழமை

## இது முதன்முறையன்று

சென்றவாரம் நிகழ்ந்த சிங்கள தமிழ்த் தராதரப் பரீட்சைக்குரிய வினப்பத்திரங்களுட் சில முந்தியே சோரமாக வெளிவந்துவிட்டபடியினல் அப் பரீட்சை பாதி நடந்தும் பாதி நடவாமற் பங்கப்பட்டுப் போயது. பரீட்சை வினக்கள் ஏனைய தேசங்களிலும் உரிய காலத்துக்கு முந்திச் சோரமாக வெளிவருதல் அரிதிலுண்டெனலாம்; ஆனல் இந்த இலங்கை வித்தியாபகுதியில் இத்தவறு பலமுறை நிகழ்வதைப்பரீட்சார்த்திகள் உபாத்தியாயர்கள் வித்தியாதரிசிகள் இன்னுங் கல்வியதிகாரம் நடாத்துவதிற் சம்பந்தப்பட்டோர், அபிமானிகள் பலரும் அறிந்திருப்பர்; இப்படியான பரீட்சை வினப் பத்திரங்கள் இதற்கு முந்திப் பலமுறை வெளிவந்ததை அறிந்திருந்தும், வித்தியாபகுதியார், மேன்மேலும் இப்பெருந்தவறு நிகழவும் பார்த்துக்கொண்டு பராமுகமாயிருத்தல், இலங்கை வித்தியா பகுதியாரிடத்தில் அந்தரங்கமாக வைத்திருக்கவேண்டிய கருமங்களை அங்ஙனம் வைத்திருத்தற்கு ஆற்றலில்லையென்பதைக் காட்டிக் கொடுக்குமல்லவா?

பரீட்சை வினப்பத்திரம் போன்ற இரகசியமான விஷயங்கள் காலத்திற்கு முந்தி வெளிவருவதற்குக் காரணம், அவை அச்சிடப்படும் அச்சியந்திரசாலையாகுமென்று பலர் அபிப்பிராயப்படுவதுமுண்டு; ஆனல், இந்த வினப்பத்திரங்கள் அச்சிடப்படும் இடம் அரசினருக்குரிய சொந்த அச்சுக்கூடமென்றே நினைக்கின்ரும்; அங்கே ஒருமுறை இருமுறை மும்முறையல்ல பலமுறை இப்படியான தவறு நேருமானல், இத்தவறுகள் நேருதற்குப் பொறுப்பாளியாரென்ற வினப் பிறக்கின்றதல்லவா; ஊரவர்களாலும் சில சபையினர் சங்கத்தினராலும் வைத்து நடத்தப்படும் அச்சியந்திரசாலைகள் சிலவற்றிற் பரீட்சைக்குரிய வினப்பத்திரங்கள் பலநூற்றுக்கணக்கில் அந்தரங்கமாக அச்சிடப்படுவதையும், அப்பத்திரங்கள் குறித்த காலத்திலன்றி, அதற்கு முந்திச் சோரமாக, வேறு எவ்வாற்ருனுமாக வெளிவராதிருத்தலையும் நாம் நேரில் அறிவோம். விஷயம் இப்படியிருக்க, ஊரதிகாரி வீட்டிலே களவு நேர்வதுபோல், அரசினர் அச்சியந்திரசாலையில் இப்படியான தவறுகள் நேருமானற் பின் செய்வதுதான் என்னை? இவ்வாறு வினப்பத்திரங்கள் காலத்திற்கு முந்திச் சோரமாக வெளிவரும்போது ஒருமுறையேனும் அந்தத் தவற்றைக் கண்டுபிடித்து, அத்தவறுக்குக் காரணராயுள்ளவரைக் கண்டுபிடித்து ஊரறியத் தண்டித்தால், இப்படியான தவறுகள் இனிமேலாயினும் நேராவென ஒருவாறு எதிர்பார்க்கலாகும் மேலும் "பிள்ளைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன்போகுந் தருணம்" என்றவாறு, இப்படியான பரீட்சை வினப்பத்திரங்கள் முறைமாறிச் சோரமாக வருவதனல், நடைபெற்ற பரீட்சை நடைபெருது இடையிலே பங்கப்பட, பின்னர்க் காலம் நேரம் குறித்து அதிகாரிகள் முதலிலிருந்து பரீட்சை நடத்தத் தொடங்கும்போது, இவைகள் காரணமாக அதிக சிரமப்படுவோரும், பொருள் நஷ்டமடைவோரும் ஏழை வித்தியார்த்திகளல்லவா? இவற்றையெல்லாம் வித்தியா பகுதியார் சிந்தித்து, இப் பிழைகளால் தமக்கு இடையிடையே படும் மாசினைத் துடைத்தும், பரீட்சார்த்திகளுக்கு நேரும் சிரமம்பொருட்செலவு என்னுமிவைகளை நேராவண்ணந் தடுத்துங் கருமமாற்றுவாராக.

—

## இன்று நல்லைக்கந்தன் 8-ம் திருவிழா

வந்த வேளை எரித்த மலர்க்கணன்
தந்த வேளைத் தயித்தியர் காலனை
எந்த வேளையும் என்னுள நீங்கலாக்
கந்த வேளைக் கருத்து ளிருத்துவாம்,

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இக் கல்லூரியும், இதன் கிளையாகிய சைவமகளிர் கல்லூரியும், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தின் பொருட்டு, இன்று (9 8-46) தொடக்கம் விடுதலை செய்யப்பட்டு வருகிற செப்டெம்பர்மீ 2ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென அறியாலானேம்.

—

## உபாகர்மம்

நிகழும் வியவருஷம் ஆடிமாசம் 28ந் தேதி (12-8-46) திங்கட்கிழமை இருக்குவேத யசுர்வேத உபாகர்ம தினமாதலால் அன்று அதனை வசதியுள்ளவர்களாவது ஒருங்கு சேர்ந்து செய்வது நல்லது. அதனல், பிராமண சமாஜ ஆதரவில் நடைபெறும் வேதாத்தியயன வகுப்பின் ஆசிரியர், வேதாந்த சிரோமணி, பிரமஸ்ரீ K. V. இராமசர்மா அவர்களை ஆசாரியராகக் கொண்டு இருக்கு யசுர் ஆகிய இருவேதிசளுக்கும் எறறவாற உபாகர்மத்தை யாழ் வண்ணை: வைத்தியேசுவர சுவாமி சந்நிதியில் அன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பித்து நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. முற்பகல் 9 மணிக்கு பிரமசாரிகளுக்குச் சமிதாதானமும், எல்லாருக்கும் அத்தியாய உத்சர்ஜன அகரணப் பிராயச் சித்தமும் முற்பகல் 10 மணிக்கு மஹா சங்கல்பமும் ஆரம்பிக்கப்படும்.

சௌகரியமுள்ளவர்கள் குறித்த நேரங்களுக்குப் பிந்தாமல் அங்கு வந்துசேர்ந்து உபாகர்மத்தைச் செய்து கொள்ளலாமெனப் பிராமண சமாஜச் சார்பில் விண்ணப்பித்துக் கொள்ளப்படுகிறது.

# உலகம்பலவிதக் கதை

(முற்ருெடர்—111)

### பார்க்கப் பயமாயிருக்கிறது

என்னறையுட் போனவுடன் நான் அணிந்திருந்த காதோலை முதலாகவுள்ள ஆபரணமனைத்தையும் கழற்றி ஒதுங்க வைத்தேன்: சீவிப் பின்னித் தொங்கவிட்டிருந்த என் கூந்தலின் பின்னலை நீக்கிப் பரந்துசோர்ந்தபடி முதுகிலும் மார்பின் இருமருங்கும் தொங்கவிட்டேன்; குங்குமத்தையெடுத்து இரு கன்னத்திலும் பூசினேன்: நெற்றியிற் பெரிய கரிய பொட்டிட்டேன்: முகத்திற்குப்பூசும் வெள்ளிய "புசர்"மாவை எடுத்துக் கரைத்துக் கடைவாய்களில் வக்கிரதந்தம்போற் புலப்படும்படி வரைந்தேன்; என் அதரங்களிலும் அதனைப் பூசினேன்: உடுத்திருந்த பட்டுச் சேலையை அகற்றிக் கருநிறங்கொண்ட ஒரு சேலையைப் பாவாடைபோலக் கொய்து கட்டிச் செந்நிறமான ஒரு துணியைத் தாவணியாக இட்டுக்கொண்டேன்: ஐயர் வெயிற் காலத்திலே குளிர்ச்சியான பார்வையின்பொருட்டு இடும் மூக்குக் கண்ணுடியை இலட்சுமியைக் கொண்டு எடுப்பித்து என் மூக்கிலே மாட்டினேன்; கால்களில் மாத்திரம் ஒலிசெய்யக்கூடிய தண்டைகளை இட்டேன்: அயலிலுள்ள வேப்பமரத்தில் இலைசெறிந்த இருகிளைகளை இலட்சுமிமூலம் ஒடிப்பித்து இரண்டு கைகளிலும் பரித்துக்கொண்டு என் அறையிலுள்ள நிலைக் கண்ணுடியில் என் அலங்காரத்தைப் போய்நின்று பார்த்தேன்: பார்த்தவுடன் நானே என் தோற்றத்தைக் கண்டு அஞ்சி அருவருத்தேன்: "உண்மையை யுணர்ந்திருந்தும், உங்களை இந்த நேரத்திற் பார்க்கப் பயமா யிருக்கிறதம்மா" என்ருள் இலட்சுமி: இப்படியெல்லாம் அலங்காரஞ் செய்தபின், கைகளில் வேப்பங் கிளைகளைப் பரித்தபடி துரிதமாக நடந்து ஊரதிகாரியிருக்குமிடத்திற்குப் போய், ஐயா, ஊரதிகாரியாரே! வந்துவிட்டேன்: விரும்பிய விதமே நடந்துகொள்ளுங்கள் என்று உரத்த தொனியுடன் சொன்னேன்; என்னைக் கண்டமாத்திரத்தே ஊரதிகாரியவர்கள் திடுக்குற்ருர், ஏங்கினர், வெகுண்டார்: ஏற இறங்கப் பார்த்தார் இருக்கை விட்டு மெல்ல எழுந்தார்; நீ யார் என்று கேட்டார்.

### "எனக்கல்ல பைத்தியம்"

சற்று முந்தி நீங்கள் அன்னமே, மயிலே, குயிலே, கண்ணே, மணியே, கற்கண்டே, கனிரசமே என்று என்னென்னவோ எல்லாஞ் சொல்லி ஆசை வைத்தழைத்த பெண் நான்தான் என்று உரத்த சத்தத்துடன் சொன்னேன்; 'உன்னை நான் அப்படி அழைக்கவுமில்லை; உன்மேல் ஆசை வைக்கவுமில்லை; நீ அப்பாற் போய்விடு" என்று அதட்டிச்சொன்னர்; இல்லை, நான்தான் நீங்கள் ஆசை வைத்த பெண்; என்னை அப்படிச் சொல்லிப் புறக்கணிக்கவொண்ணது என்று சொல்லிக்கொண்டு போகாமல் நின்றேன்; உடனே அந்த ஊரதிகாரி வெகுண்டு, "உனக்கு என்ன பைத்தியமா? என்று கேட்க, எனக்கல்ல பைத்தியம் என்றேன்; நீ என்ன காளியா என்று அவர் கேட்க, நான் காளியானலும் உங்களுக்குச் சொன்ன வாக்கை மறக்கவில்லையென்று சொல்லிச் சற்றுச் சமீபத்திற் போக, உங்கள் ஐயர் எங்கே? என்று அவர் கேட்க, நீங்கள்தான் என் ஐயர் என்று நெருங்கினேன்; "சாமீ, சாமீ' என்று ஊரதிகாரி சத்தமிட, வீட்டிற்குரிய ஐயர் ஓடிவந்தார்; இதென்ன சாமி, என் என்னுடன் வீண் வம்பளக்கிறீர்? இது என்ன விபரீதம்? இந்தக்கொடு நீலியை அப்பால் அகற்றிவிட உம்மால் முடியாதா? என்று ஐயரைச் சினந்தார்; ஐயோ, பாவம்; ஐயர் ஏதுமறியார்: என்னைப்பார்த்தவுடனே பெருந்திகில் கொண்டார்; பார்த்தேன்; அந்த ஊரதிகாரியையும் ஐயரையும் என் விஷயத்திலாயினுந் தவறு செய்யாமற் கட்டுப்படுத்தி வைப்பதற்கு அதுதான் நல்ல சமயமென்று உணர்ந்தேன்; தடித்த உரத்த குரலில் அவர்களிருவரையும் பார்த்து "ஹே! அறிவிலிகளே! துர்த்தர்களே; என்ன காரியஞ் செய்யத் துணிந்தீர்கள்? நான் உதிரமாகாளி, இந்தப் பெண் தனக்கு ஏதும் ஆபத்து வந்த காலத்தில் என்னைத் தன் மனத்தில் உறைக்கத் தியானிப்பாள்; அவளுக்கு நேரும் ஆபத்தைத் தடுத்து, ஆபத்துச் செய்யத் துணிந்தவர்களைப் பிடித்துக் கடித்து அவர்களுடைய உடம்பிலுள்ள உதிரத்தைக் குடித்துவிடுவேன்; ஏ, ஊரதிகாரி, உன் பேர்த்தியென்று மதிக்கவேண்டிய இந்தச் சிறுமியின்மீது காட்டு மிருகம்போல் நீ இச்சை கொண்டாய்; உன் அதிகார வெறியினல் அடாதன செய்யத் துணிந்தாய் அடா, காமதுரந்தரா! உன்னை இந்தக்ஷணமே பிடித்துக் சதறக்கதறக் கடித்து உதிரங் குடிக்கப் போகிறேன்; என்னடா சொல்லுகிருய் மூர்க்கா? என்று ஆவேசத்துடன் சொன்னேன்; "தாயே நான்செய்ததெல்லாம் தப்பு, இனிமேல் தவறுசெய்யக் கனவிலும் நினையேன்; உலக மாதாவே, எனக்குப் பிராணபிட்சை தந்தருளவேண்டும் ஆத்தாளே!" என்று சொல்லி என் கால்களில் அடியற்றமரம்போல் விழுந்து கிடந்தபடி கும்பிட்டார்; உடனே, ஐயரைச் சீறிப் பார்த்து அடா! மூடப்பார்ப்பானே! நீ பிராமண குலத்திற் பிறந்தும் பஞ்சமா பாதகங்களையும் அஞ்சாமற் செய்யத் துணிந்தாய்; பெற்றபிதா என்று மதித்து நம்பி உன்னிடம் அடைக்கலம் புகுந்த இந்தச் சிறுமிக்குத் துரோகஞ்செய்யத் துணிந்தாய்; சூர்த்தா! இந்த ஊரதிகாரியைக் காட்டிலும் நீ கொடியவன், உன்னைப் பிடித்து உன் உயிரையும் உடலிலுள்ள உதிரத்தையும் ஒருங்கு பருகினலேயொழிய, நான் கொண்ட கோபந் தணியாது: என்னடா சொல்லுகிருய் மூர்க்கா? என்று சொல்வதற்கிடையில், ஐயர் என் காலில் விழுந்து கிடந்து "அகிலாண்ட நாயகியே! புவனேசுவரியே! நான் பாவி! மூடன், இனிமேற் பிழைசெய்ய நினைக்க மாட்டேன்; என் பிழையையெல்லாம் பொறுத்து என்னைக் காத்தருளம்மா! என்று கதறினர்; ஏ! மனுஷப் பதரே, எழுந்துநில்லுங்கள்என்றேன்; இருவரும் உடனே எழுந்து ஒதுங்கி நின்றனர்,

### "தாயே! உன்னடைக்கலம்"

அதற்கிடையில் அந்தப் போராவாரத்தைக் கேட்டு வீட்டிலுள்ள ஆத்தாளும் இலட்சுமியும் அங்கே ஓடிவந்தார்கள்; என்னுடைய கோரமான தோற்றத்தையும், ஐயரும் ஊரதிகாரியும் படும் பாட்டையுங் கண்டு, அந்த அறையுள் வருதலின்றி அஞ்சி ஒதுங்கிச் சிறிது தூரத்திலே நடுங்கியபடிநின்ருர்கள்; "ஐயோ! தாயே! இந்தச்சண்டாளமனுஷனைத்தீமைக்கு உதவி செய்யாதே என்று ஆயிரமுறை தடுத்துச் சொன்னேன்: மனுஷன் என்சொல்லைக்கேட்டபாடில்லை; வீரமாகாளித் தாயே! செய்த பிழையெல்லாம் பொறுத்து எனக்கு மங்கல்யப் பிச்சை தந்தருளவேண்டும், பரமேசுவரியே" என்று தூரத்தில்நின்று இரந்துகும்பிட்டு வேண்ட, "ஹே, அம்மா! உன்பொருட்டுத்தான்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலியில் நெசவுத் தொழில்

## இரண்டு ஆண்டின்பின் சிறந்த முன்னேற்றம் ஐக்கிய முறையில் அபிவிருத்திக்கு ஏற்பாடு

### கதரை உடுத்துக் கதிபெற வழி

(நமது நிருபர்)

நீர்வேலியில் 25-6-44ல் ஸ்ரீமான் E. B. திசவீரசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கமத்தொழிலாளர் மகாநாட்டில் "நீர்வேலியில் அரசாங்கம் ஓர் கைத்தொழில் நிலயத்தை ஆரம்பிக்க வேண்டும்" என்பதாக ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது வாசகர்களுக்கு இப்பத்திரிகை வாயிலாக வெளியிடப்பட்டிருந்தது. அத்தீர்மானத்தின்படி கைத்தொழிற் பகுதியார் நீர்வேலியில் ஓர் நெசவுத் தொழிற் பயிற்சி நிலயத்தை ஆரம்பித்துள்ளனர் இப்பயிற்சி நிலயம் 1945-ம் ஆண்டு மாசி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அரசினர் 2 தறிகளே கொடுத்து உதவியிருந்தார்கள். ஆரம்பிக்கப்பட்டு 6 மாதத்துக்கிடையில் பயிற்சி நிலயத்தில் நல்ல அபிவிருத்தி காணப்பட்டது. மாணவர்கள் 4 தறிகளைத் தங்கள் பொறுப்பில் வருவித்துக்கொண்டனர் 6 மாத முடிவில் 6 தறிகளில் நெசவுவேலை நடைபெற்றது. ஏராளமான துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த நிலயத்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட துணி ஊரவர்களுக்கும் பிற ஊரவர்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வந்தது. 18 பிள்ளைகள் பயிற்சிபெற்றுவந்தனர். லாபத்தின் ஒருபகுதி பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. 6மாத முடிவில் இப்பயிற்சி நிலயத்தில் வடமாகாண அதிபர் ஸ்ரீமான் C. குமாரசுவாமி தம்பதிகள் தலைமையில் ஓர் பரிசளிப்பு விழா நடைபெற்றது; மாகாண அதிபர் நிலயத்தைப் பார்வையிட்டு நடைபெறும் வேலைகளைப் பாராட்டினர். இப்பயிற்சிநிலயத்தில் உள்ள மாணவர்களுக்கு—நூல் நூற்றல் பஞ்சடித்தல் முதலிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன, இலங்கைத் தீவிலேயே முன்மாதிரியான நிர்வாகம் என்று பத்திரிகைகளும் பாராட்டி எழுதியுள்ளன. சென்றவருட தீபாவளிக் கொண்டாட்டத்துக்கு நீர்வேலி வாசிகளுக்கு ஏராளமான புடைவைகளைத் தயாரித்துக் கொடுத்ததற்காக மாணவர்களையும் பயிற்சி ஆசிரியரையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந் நிலயத்திலிருந்து விற்பனவுசெய்யப்படும் துணிகளுக்கு கூப்பன்கள் கொடுக்கப்பட வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது இந்நிலயத்தில் 8 தறிகள் வேலை செய்கின்றன மாணவர்கள் பூ வேலைகளும் பழகியிருக்கிறார்கள். பலவிதமான துவாய்கள்—விற், வேட்டி, சால்வை, சட்டைத் துணி வகைகள், சேலைகள் எல்லாம் தயாரிக்கப் பழகியிருக்கிறார்கள். இந்த வருடத்தில் 14 மாணவர்கள் தான் பயிற்சி பெறுகிறார்கள்.

இங்கே பயிற்சிபெறும் மாணவர்கள் தாங்கள் ஓர் ஐக்கியசங்கமாகச் சேர்ந்து பங்குகள் சேர்த்து முதலைத் திரட்டி ஓர் தொழிற்சாலையாக்க விரும்பினார்கள். தங்கள் விருப்பத்தைப் பயிற்சி ஆசிரியர்மூலம் அரசாங்கத்துக்குத் தெரிவித்தனர். மாணவர்கள் விருப்பத்துக்குக் கைத்தொழிற் பகுதியாரும் இசைந்தனர். இப்படியாக ஐக்கியசங்கமாக ஆக்கிக்கொண்டால் பெரும்பகுதி லாபம், கஷ்டப்படும் ஏழை மாணவர்களுக்கே கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே அரசினர் பயிற்சி நிலயமாக இருந்த இந் நெசவு நிலயத்தை "நெசவுத் தொழில் மாணவர் ஐக்கியசங்க"மாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்காகப் பயிற்சி நிலயத்தில் 24-6-46ல் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுதுக் கூட்டத்துக்கு மாணவர்களுடைய பெற்றோர்களும் சமுகமாயிருந்தனர். "நீர்வேலி நெசவுத்தொழில் மாணவர் ஐக்கியசங்கம்" ஸ்தாபிக்கப்பட்டது.

நெசவுத்தொழில் மாணவர் ஐக்கிய சங்கம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. கைத்தொழிற் பகுதியார் இச்சங்கத்தை அங்கீகரித்துக் கொண்டார்கள். இலங்கையிலே ஆரம்பிக்கப்பட்ட ஐந்தாவது சங்கம் என்று இது கூறப்படுகிறது. ஊரவர்கள் இன்னும் பிள்ளைகளை அனுப்பி நெசவு உற்பத்தியைப் பெருக்குவார்களாக. பருத்திச் செய்கையை விருத்தி செய்ய வேண்டும்; பஞ்சை நூலாய் நூற்க வேண்டும்; தறி நாட்ட வேண்டும்; கதரை உடுத்துக்காட்ட வேண்டும்.

# இது வாய்க்குமா?

## சம்பள விஷயமாக ஆசிரியரின் கிளர்ச்சி

இப்போதுள்ள திட்டத்தின்படி அரசாங்கஉத்தியோகத்தர்க்கும் ஏனையோர்க்குமாக 2 கோடியே 50 லட்சம் ரூபா வேதனங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது இத்திட்டத்தில் இன்னும் 15லட்சம் ரூபாவைச் சேர்க்க அரசாங்கத்தார் நிச்சயித்திருக்கின்றனர் என்று நம்பத்தகுந்த செய்திகள் கூறுகின்றன.

இந்த 15 லட்சம் ருபா அதிகரிப்பு ஆசிரியர் கேட்கும் சம்பள உயர்ச்சிக்கென்றே கருதப்படுகிறது.

இலங்கையில் ஏறக்குறைய 30000 ஆசிரியர் உளர், இவர்கள் எல்லாரும் இப்போது வகுக்கப்பட்ட சம்பளத் திட்டத்தில் மிகவும் வெறுப்புற்றுக் கிளர்ச்சி செய்தனர். செய்கின்றனர்.

அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் கல்விமந்திரி கன்னங்கராவுக்கு விரோதமாக ஓர் ஆசிரியரை அபேட்சகராகவிடுவதென்றும் அவர்கள் தீர்மானித்து முயற்சிகள் செய்ததும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

# கச்சேரி உத்தியோகத்தர்கள்

## கிளிநொச்சியிற் கமஞ் செய்வதற்கு அங்குள்ள உத்தியோகத்தர் ஏஜண்டுகளா?

### ஏழை விவசாயிக் கில்லாத சலுகை எதற்கு? காலபோகமும் அழிந்து விடுமா?

(நமது நிருபர்)

ஏற்கனவே இந்தப் பத்திரிகையில் வெளிவந்த பிரகாரம் கிளிநொச்சிச் சிறுபோக வேளாண்மை சீர்கெட்டு அழியும் தருணத்தில் இருக்கிறது. குளத்தை நிரப்புவதற்குத் தக்கதாக மழை பெய்யுமானல் அரைவாசிப் பயிராவது தப்பும். ஆனல் மழை பெய்யுமா? என்று விவசாயிகள் வானத்தை நோக்கிப் பெருமூச்சு விடுகின்றனர் இப்போது குளத்தில் 2 அடித் தண்ணீர் தானும் இல்லை, இதுமாத்திரமன்றி அடுத்த காலபோக வேளாண்மை நடப்பதும் இப்போது சந்தேகமாயிருக்கிறது.

சென்ற டிசெம்பர் மாதத்தில், அதிகாரிகள் என்றிருப்போரின் பாராமுகத்தால் 2 அடி தண்ணீர் அநியாயமாக வெளியே போனது என்று விவசாயிகள் முறையிடுகின்றனர்.

இது மாத்திரமன்றி விவசாயிகள், அரசாங்க உத்தியோகத்தர்மீது இன்னோர் பாரதூரமான குற்றமும் சாட்டுகின்றனர்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள சில உத்தியோகத்தர்க்குக் கிளிநொச்சியில் நிலங்கள் உண்டாம். அவர்கள், இந்தஆண்டில் தங்களுக்குரிய நிலங்கள் முழுவதிலும் விதைத்துளளனர் என்றும், அவர்களுக்குரிய தண்ணீர் முழுவதும் கொடுக்கப்பட்டது என்றும் சொல்கிறார்கள், கிளிநொச்சியில் உள்ள சில அரசாங்க உத்தியோகத்தர்கள், இந்தக் கச்சேரி உத்தியோகத்தரின் ஏஜெண்டுகள் போல இருந்து சாதகமாக, ஒருதலைப்பட்சமாகக் கருமம் ஆற்றினர்களாம். இந்தக் கச்சேரி உத்தியோகத்தர்களுக்குக் கொடுக்கப்பட்ட சகாயங்கள் கிளிநொச்சியில் உள்ள மற்ற விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவில்லையாம்.

# அதிக நம்பிக்கை

## வைக்கவேண்டாம் என்கிறார் ஆள்வாப்பிள்ளை

1946 வருடத்தின் பிற்பகுதிக்கு இந்தியாவுக்கு 2,70,000 டன் அரிசி ஒதுக்கப்பட வேண்டுமென சர்வதேச அவசர உணவுசபை சிபார்சு செய்திருக்கிறது. மேலும், இலங்கைக்கு 1,80,000 டன், சீனாவுக்கு 2,80,000 டன், மலாயாவுக்கு 1,70 000 டன், பிலிப்பைனுக்கு 1,45,000 டன் அரிசியும் ஒதுக்கப்பட வேண்டுமென அது சிபார்சு செய்திருக்கிறது.

'கடுதாசியில் எல்லாம் எழுதலாம் ஆனல் காரியம் தான் வேண்டும். 1946ம் ஆண்டு பிற்பாகத்து 6 மாதத்துக்கு 180,000 தொன் அரிசி இலங்கைக்குத் தர சர்வதேச சபை நிச்சயித்திருக்கிறது. ஆனல் இத்தொகை கட்டாயம் கிடைக்குமோ என்பதுதான் கேள்வி.

"உதாரணமாக இந்த ஆண்டின் இரண்டாம் கந்தாயத்துக்கு 90,000 தொன் அரிசி இலங்கைக்கு விதிக்கப்பட்டது. ஆனல், உண்மையிற் கிடைத்தது எவ்வளவு 60000 தொன்னும் இல்லை எனவே 180,000 தொன் வரப்போகிறதே என்று நாம் அதிக நம்பிக்கை வைத்து அரிசி விநியோக அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்க வொண்ணுது"

என்று உணவுக்கட்டுப்பாட்டதிகாரி ஸ்ரீ கே. ஆள்வாப்பிள்ளை ஓர் அறிக்கை விடுத்திருக்கிருர்.

## சீனி வருகிறது

46,000 மூடை சீனியுடன் சிங்கப்பூரிலிருந்து ஓர் கப்பல் இலங்கையை நோக்கிப் புறப்பட்டுவிட்டது. இக்கப்பல் வருகிற திங்கட்கிழமை கொழும்புக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

# சுந்தரர் திருநாள்

## எங்கும் கொண்டாட்டம்

4 8-46 ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கராம்புவில் மீனாட்சியம்மையார் குருபூசை மடத்தில் ஷை விழா பிரம்மஸ்ரீ ந. பொன்னுச்சுவாமிக் குருக்களவர்களின் தலைமையிலாரம்பமாயது.

பிற்பகல் 3மணி முதல் 6மணி வரையும் "பெரியபுராணம் வெள்ளானைச் சருக்கம்" பிரபல புராண வறிஞர்களால் விரிவுரை நடாத்தப்பட்டது. பின்னர் 6 மணிக்குக் கடவுள் வணக்கத்துட னுபந்நியாசங்களாரம்பமாயின

தலைவர், மடத்தின் சேவைகளைப் பாராட்டியதும், திரு. K. S. ஆனந்தர் B. O. L. அவர்கள் நாயனரின் சரித்திரத்தைப் பக்திரசந் ததும்ப வெடுத்துக்கூறியீற்றில் திருவிழாக்களில் நடக்கும் தாசியர் நடனம்; வாணவிளையாட்டு; மேளகாரருக்காக வுயிர்க்கொலை: ஆலயத்தி லுயிர்ப்பலி போன்ற வக்கிரமங்களைக் கண்டித்தார்.

நூற்றுக்கணக்கான யோக. ஆசனங்கள் பயிற்சிபெற்ற வொருவரால் செய்துகாண்பிக்கப்பட்டது. திரு. வ. நாகரத்தினந் தேசிய கீதம் பாடிச் சபையை மகிழ்வித்தார்.

ஆசிரியர் திரு. R. T. சுப்பிரமணியம் பெண்கட் கத்தியாவசியமாகப் பாகசாஸ்திரம், வீட்டு வேலை கைப்பணி, குழந்தை வளர்ப்பு, உபசரித்தல், வைத்தியக் கைமுறைகள், தெய்வபக்தி, வீட்டையலங்கரித்தல் முதலாயகருமங்களிற் பயிற்சி யளிக்க வேண்டுமென்றும், இதுவே தக்க ஸ்ரீதனமெனவும், இக்காலக் கல்வி முறையொழுங்கி லிவை காணப்படாத படியால், "ஓர் பெண்கள் முன்னேற்ற சங்கம்" தாபிக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினர். குறிப்புரை கூறவந்த திரு ந. அருணசலம் B. A. அவர்கள் சமயக் கல்வியினவசியத்தை நன்கு விளக்கினர் தலைவர் நிறைவுரை கூறியதுங் கடவுள் வணக்கத்துடன் 11 மணிக்கு விழாவினிது நிறைவெய்தியது

●

4-8-46 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்க ஆதரவின்கீழ் சுந்தர மூர்த்தி நாயனரின் குருபூசை அதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது முதலில் ஸ்ரீமதி த. குலசேகரம்பிள்ளை அவர்களால் சுந்தரமூர்த்தி நாயனரின் தேவாரங்கள் பண்ணுடன் ஓதப்பெற்றன. பின்னர் இளந்தமிழ்ப் புலவர் திரு இ. நவரத்தினம் அவர்களால் "சுந்தரர் காட்டிய நெறி" என்பது பற்றி ஓர் நீண்ட சொற்பொழிவு ஆற்றப்பெற்றது. ஈற்றில் காரியதரிசியின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று,

●

நிகழும் ஆடிமாதம் 20ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கல்கிசை இந்து இளைஞர் சங்கத்தின் ஆதரவின்கீழ் தேவி இல்லத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை வெகு சிறப்பாகக் கொண்டாடபபட்டது. அன்று பிற்பகல் நாலுமணிககுக் கூடிய விசேஷ கூட்டத்தின் பொழுது சங்கத்தாரால் பயிற்றப்படும் மாணவ மாணவிகளால் தேவாரம் ஓதப்பட்டது சுந்தரமூர்த்தி நாயனரின் திருவுருவப் படத்துக்குச் சிறப்பாக ஒருபூசை போற்றித் திருவகவல் ஓதி பூக்களால் அர்ச்சித்து தூப தீபங்களால் உபசாரணை செய்யப்பட்டது; அன்று சமுகஞ் செய்தவர்களுக்கு விபூதிப் பிரசாதத்துடன் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. திரு. பாலசந்திரனவர்கள் தமது இன்னிசையால் சபையோரை மகிழச் செய்தார் திரு. சி. முருகேசு அவர்களால் சுந்தரமூர்த்தி நாயனர் புராணம் பெரியபுராணத்தில்கண்டபடி சரிதமுறையாகக் கூறப்பட்டது கூட்டம் ஏழுமணியளவில் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்க்குக் கடிதங்கள்

# "எளிய கமக்காரர்"

## "நா காக்க —"

ஐயா,

2—8—46 இல் வெளிவந்த தங்கள் பத்திரிகையில் "நா காக்க—" என்ற தலையங்கத்தின் கீழ் தங்கள் நிருபர் எழுதியுள்ள விஷயத்தை வாசித்து விசனப்படுகின்றேன். காரணம் காங்கேசன் துறை சிமிட்டித் தொழிற்சாலைக்குரிய அத்திவாரக்கல் நாட்டு விழா வைபவத்தன்று சமுகமாயிருந்தவர்களுள் யானும் ஒருவனாகும். அச்சமயம் திரு. S. சுவாமிநாதனவர்கள் தமது பேச்சின்போது "எளிய கமக்காரர்" என்று கூறியது உண்மையே. அவர் 'வறிய' என்பதற்கே 'எளிய' என்று கூறியதாகவே அங்கு சமுகமாயிருந்த ஆயிரக்கணக்கான மகளிர் மக்கள் விளங்கி ஊக்கத்துடன் கேட்டு அமைதியாக விருந்தனர். ஆனால் அங்கு என்னருகாமையிலுள்ள ஓர் அரசாங்க உத்தியோகத்தர் தன் சுவாதீனமற்ற நிலையில் விழா ஆரம்பமானதிலிருந்து பல முறைகளில் அவசியமற்ற வார்த்தைகள் ஆடிக்கொண்டிருந்தபோது விழாவை நன்கு நடத்தும் நோக்சமாகவிருந்த இரண்டொருவர் இவரைச் சமாதானப்படுத்தி அமைதியுண்டுபண்ண எத்தனித்ததில் இவ்வுத்தியோகஸ்தர் வெறி கொண்டவராக இருக்குஞ் சமயம் திரு. S. சுவாமிநாதனின் "எளிய கமக்காரர்" என்னும் வாக்கியம் இவ் வுத்தியோகஸ்தருக்கு ஓர் வாய்த்த தருணமாகக் கொண்டு விரைவாக எழுந்துநின்று "நீ எப்படி எளியகமக்காரர் என்று சொல்லுவாய்" எனப் பலமாகக் கண்டித்தார். அவரருகில் இருந்த அவர் சகோதர உத்தியோகஸ்தரும் அதை ஆமோதித்தார். இச்சமயத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர்வந்து இவரை அழைத்து வெளியேபோகும் சமயம் இன்னுஞ் சிலர், தங்கள் நிருபர் கூறுவதுபோல் நூற்றுக் கணக்கில் திரண்டு அல்ல பத்துப் பதினைந்துபேர் அளவில் எழுந்து சத்தமிட்டனர். இவர்களைப் பொலிசார் வெளியே கொண்டுபோய் விட்டு அமைதியை உண்டுபண்ணினர். நூற்றுக்கணக்கில் திரண்டு யுத்த சந்நதராகநின்றனர் என்பது உண்மையாகாது.

இங்ஙனம்
அபிமானி

○

## ஆசிரிய பரீட்சை

ஐயா,

"பரீட்சித்தலும் புள்ளியிடுதலும்" என்ற ஒரு பாடம் பரீட்சையை முன்னேற்றமடையச் செய்வதற்காகப் பயிற்றப்படு மாசிரியர்களுக்கே பயிற்றிவரும் இக்காலத்தில் முன்னொரு காலத்துஞ் சம்பவித்திராத பின்வரும் மாசுகளேற்பட்டமை எவரும் வியக்கத்தக்கதே. இப்பரீட்சைக்குச் சென்ற அநேக பரீட்சார்த்திகள் குடும்ப பாரம்பரியத்தை ஏற்றவர்கள். இவர்கள் தம் வாழ்நாட்களிற் சென்ற ஐந்து ஆறு மாதங்களை ஊணுறக்கமின்றிப் பொருட் செலவையும் பாராது கற்றனர். இவர்களிற் சிலர் சுட்டிலக்கம் வராமையால் வித்தியா கந்தோருக்குத் தந்திகளுமடித்தனர். பதில் கிடைத்திலது. எனவே, பரீட்சை ஸ்தானங்களுக்குச் சென்று தாங்கள் செய்துள்ள ஒழுங்குகளைச் சொல்லி, தம் பெயர் அட்டவணையிலிருப்பின் பரீட்சையிற் பிரவேசிக்க உத்தரவு தருமாறு மேற்பார்வையாளரை வேண்ட, அனுபவக் குறைவினாற்போலு மவர்கள் மறுத்துவிட்டனர்.

இம் மேற்வையாளரே "நேரசூசி" கொண்டுவராததற்குக் கூடப் பரீட்சார்த்திகளாகிய எங்களைக் கண்டித்தமை வருந்தத்தக்கதே. இச்செயல் ஆடு நனைய ஓநாய் வருந்துவது போலாகும்.

"தளபாடம் ஏற்றதா யிராவிடின் பரீட்சை பிழைபடு"மென்பது ஒரு விதியாகும். இதற்கேற்ப எம் பரீட்சை மண்டபத்தில் தளபாடங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

பரீட்சார்த்திகள் பலர் தம் மேலங்கி உறையுள்ளும், கை மடிப்புக்குள்ளும், உட்சட்டைக்குள்ளும் குறிப்புகளை வைத்துக்கொண்டு சென்று பிரதி பண்ணுகின்றனர். இச் செய்கைகளை மேற்பார்வையாளர் கண்ணுற்றுக்கண்டும் நடவடிக்கை எடுக்காது விட்டமை வருந்தத்தக்கதே.

விணப்பத்திரங்கள் வெளியானமையும், பரீட்சையை நிற்பாட்டியமையும், பரீட்சாதிகாரிகள் குற்றமா? அல்லது பரீட்சார்த்திகளின் குற்றமா? யாமறிகிலேம். நவ உலகில் இதுவுமொரு கல்வியின் மறுமலர்ச்சி போலும். இப் பரீட்சை நேரசூசியை வருங்கால ஆசிரியர் பின்பற்றும் நோக்கமாகவா இக்கணித பாடங்களையும் பிற்பகல் இறுதிப் பாடமாக அமைத்தனர்.

இங்ஙனம்
"நன்மை விரும்பி"

---

## தான வரவு

சரவணை, ஸ்ரீ ப. செல்லையா அவர்களின் ஏக புத்திரி ஏகநாயகியம்பாள் சென்ற வெள்ளி வாரம் இரவு ஒன்பதரை மணியளவில் (2-8 45) பெற்றார் சகோதரர் உற்றார் உறவினர் ஆகியவர்கள் வருந்தத் தமக்கு நேர்ந்த சுரநோய் காரணமாகத் தமதில்லத்தில் 15-வது வயதில் தேகவியோகமடைந்ததின் ஞாபகார்த்தமாகச் சைவபரிபாலனசபைக்குத் தானமாகவரித் தனுப்பிய ரூபா இரண்டு பெற்றும்.

மானேஜர்.

---

## விஞ்ஞாபனம்

எனது பராபரிப்பிலுள்ள பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு நிகழும் விய ஆடி மீ 20 உ ஞாயிற்றுக் கிழமை துவஜாரோகணமாகி வாத்திய, நடன, கீத அலங்காரதிகளுடன் விழாக்கள் சிறப்புற நடைபெறும். அத்தருணம் பக்தர்கள் வந்து தரிசனஞ் செய்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்வார்களாக.

விசேட குறிப்புக்கள்

விய ஆடி மீ
20 உ (4.8.46) ஞாயிற்றுக்கிழமை
துவஜாரோகணம்

ஆவணி மீ
4 உ (20 8 45) செவ்வாய்க்கிழமை
ரதோற்சவம் (உறிபடி விழா)

5 உ (21.8.46) புதன்கிழமை
தீர்த்தோற்சவம்
(திருவடி நிலை சமுத்திரம்)

6 உ (22-3.46) வியாழக்கிழமை பகல்
மஹா சங்காபிஷேகம்
இரவு: திருக்கல்யாணம்

விசேஷ நாதஸ்வரக்கச்சேரி, சதிர்க் கச்சேரிகளுடன் திருமணக்கோல வீதிவலக் காட்சி நடைபெறும்.

இங்ஙனம்
இ சிவப்பிரகாசம்
கோவில் மனேஜர்

தொல்புரம்
7—8—46.

Mis 142—9-8-46

## ஆவணிமாத விசேஷ தினங்கள்

1 உ சனி (17-8-46) திருச்செந்தூர் கொடியேற்றம்
3 உ திங்கள் (19-8-46) கார்த்திகை விரதம்
செருத்துணை நாயனர் குருபூசை
8 உ சனி (24 8-46) பிரதோஷ விரதம்
9 உ ஞாயிறு (25 8 46) நல்லூர் கந்தசுவாமிகோவில் தேர்
புகழ்த்துணை நாயனர் அதிபத்த நாயனர் குருபூசைகள்
10 உ திங்கள் (26-8-46) அமாவாசை விரதம்
நல்லூர் தீர்த்தம் இளையான்குடிமாற நாயனர் குருபூசை
11 உ செவ்வாய் (27 8 46) நல்லூர் பூங்காவனம்
12 உ புதன் (28 8-46) தொண்டைமானுறு செல்வச் சந்நிதி உற்சவாரம்பம்
மறைஞான சம்பந்தர் குருபூசை
14 உ வெள்ளி (30-8-46) விநாயக சதுர்த்தி சாமஉபாகருமம்
16 உ ஞாயிறு (1-9 46) சிவியாதெரு சித்திவிநாயகர் கோயில் கொடியேற்றம்
18 உ செவ்வாய் (3-9-46) குலச்சிறை நாயனர் குருபூசை
20 உ வியாழன் (5-9-46) குங்குலியக்கலய நாயனர் குருபூசை ஆவணி மூலம்
23 உ ஞாயிறு (8-9-46) பிரதோஷ விரதம் ஆவணி ஓணம்
26 உ புதன் (11-9-46) பூரணை விரதம்
27 உ வியாழன் (12-9-46) மஹாளயபக்ஷ ஆரம்பம்
31 உ திங்கள் (15-9.46) கார்த்திகை விரதம்

## தாயுமானவர் பாடல்

சே. வெ. ஜம்புலிங்கப்பிள்ளை அவர்கள்

(முற்றொடர்)

விளங்கவெண் ணீறு பூசி
விரிசடைக் கங்கை தாங்கி
துளங்குநன் னுதற்கண்டோன்றச்
சுழல்வளி நெடுமூச் சாகக்
களங்கமி லுருவந் தானே
ககனமாய்ப் பொலியப் பூமி
வளர்ந்ததா ளென்ன வுள்ள
மன்றென மறையொன் றின்றி

நன்றாகப் பிரகாசிக்கத் தகுந்தபடி திருநீற்றை உடம்பெங்கும் பூசியும், விரிந்த சடையிற் கங்கையைத் தரித்தும், நெற்றிக்கண் ஒளி வீசும்படியும் சுழல்காற்றைப் பெருமூச்சாகக் கொண்டும், ஆகாயத்தைத் திருவுருவமாகக் கொண்டும் பூமியைத் திருவடியாகவும், சிற்சபையை இதயமாகவும் கொண்டு இறைவன் நிற்பனென்று வேதம் வெளிப்படையாகக் கூறும்.

மேலைச் செய்யுளில் "வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன்" என்றதனால் சங்கார கருத்தாவென்று தானே போதரலும் மீள அனுவதித்து யாவுமாய் நிற்கும் பரப்பிரம சொரூபமும் அச்சங்கார கருத்தாவேயென்று இச் செய்யுளில் வலியுறுத்தியதாகும். எங்ஙனமெனின் பூமி வளர்ந்ததாளென்னஎன்றதனால், பிருதிவி அவன் வடிவமெனவும், 'கங்கை தாங்கி' என்றதனால் அப்பு அவன் வடிவமெனவும் "நுதற்கண்தோன்ற" அக்கினி அவன் வடிவமெனவும், "சுழல்வளி நெடுமூச்சாக" என்றதனால் காற்று அவன் வடிவமெனவும், "உருவம் ககனமாய்ப் பொலிய" என்றதனால் ஆகாயமும் அவன் வடிவமெனவும் விளங்கியதாகும், இன்னும் பஞ்சபூதங்களின் காரியமாகிய உலகத்தைச் சர்வ சங்கார காலத்தில் நீறாக்கி யாவையுந் தனது திருமேனியில் ஒடுக்கிக்கொள்வா னென்பது தோன்ற "விளங்கவெண் ணீறுபூசி" எனவும், அசேதனத்தை நீறாக்கித் திருமேனியில் ஒடுக்கிக்கொண்டது போல் செம்மையாகிய உயிர்களைத் தன்னுளே ஒடுக்கிக்கொள்வானென்பது தோன்ற "உற்றமன்றென" எனவுங் கூறினர்.

மறைமுழக் கொலிப்பத் தானே
வரமோட வயக்கைகள்
முறைமையி னேங்க நாத
முரசெனக் கறங்க வெங்குங்
குறைவிலா வரைநி றைந்து
கோதிலா நடனஞ் செய்வான்
இறையவ னெனலா மியார்க்கு
மிதயசம் மதமீ தல்லால்.

மேற் கூறியவாறு வெளிப்படையாக வேதம் இன்னிசையோடு ஒலிக்கவும் விரதா பயத்தோடு திருக்கரங்கள் முறைமையினால் விளங்க, அதனை நாதத்துவமானது பேரிகையைப் போல ஒலிக்கவும், இவ்வாறு குறைவில்லாதபடி எங்கும் நிறைந்து குற்றமற்ற நடனஞ் செய்பவன் யாவன்? அவனையே இறைவனென்று சொல்லலாம். இதுவே யாவர்க்கும் இதய சம்மதமாயுள்ளது. [இது அடுத்த பாட்டில் முடிவுபெறும்.]

வேதமானது அந்த மாதியாயும் எல்லாமாயும் நிற்பவன் சங்கரகருத்தாவேயென்று இரகசியமாயல்லாமல் வெளிப்படையாக முழங்குவதெனவும் நாதத்துவமானது அக்கருத்தாவின் வாத அத்தம் சிருட்டிப்பவனென்று காட்டுகின்றது. அபயாத்தம் அவனே காப்பவனென்று சுட்டுகின்றது. இவ்வாறு முரசைப்போல் ஒலிப்பதெனவும், வேதவொலி ஒருபுறமும் நாதவொலி மற்றொருபுறமுமாக ஒலிக்கப் பரமானந்த நிருத்தஞ் செய்கின்றவன் சங்கரனே என்றும் கூறியபடியாகும்.

வரதம்-வேண்டியவற்றைக் கொடுத்தல், அதாவது படைத்தல்.

அபயம்-பயமொழித்தல். அதாவது காத்தல். இவ்விரண்டு செயல்களும் நித்தியனாயிருக்கும் கர்த்தாவுக்கே உண்மையாமன்றி ஏனையோர்க்கு உண்மையாகாது. ஏனையோர் காட்டும் வரதா பயங்களோ பாவனையாமென்று உணர்க.

சாட்டையிற் பம்பர
சாகரம் போலெல்லாம்
ஆட்டுவா னிறையென
வறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறவருட்
செயலி னிற்றியேல்
வீட்டறந் துறவற
மிரண்டு மேன்மையே.

மனமே! கயிற்றினால்முறுக்கிவிட்ட பம்பரத்தைப்போல் சித்சடங்களாகிய எல்லாவற்றையும் ஆட்டுவிப்பவன் இறைவனென்று உணர்ந்து அவ்விறைவனை யொழித்து சேதனுசேதனங்களைச் சுட்டியறியும் சுட்டுணர்வு ஒழிந்து திருவருட் செயலின் வழி நிற்பாயாயின் இல்லறந் துறவறமாகிய இரண்டும் மேன்மையுடையனவேயாம்.

திருவருள்வழி நிற்கப்பெற்றோர்க்கே இல்லறமுந் துறவறமும் பயன்படுமேயன்றி ஏனையோர்க்குப் பயன்படாவென்பதாம். எனவே, இவ்விரண்டறத்தின பயன் இறைவனையும் வினையையும் தன்னையும் உணர்வதாகும் இதனை விளக்கவே "சாட்டையிற் பம்பர சாகரம்போலெலாம் ஆட்டுவா னிறையென வறிந்து" என்றார். சாட்டையென்றது வினை, பம்பரம் என்றது சரீரத்தோடு கூடியுள்ள ஆன்மா. கயிற்றாற் பம்பரத்தைச் சுழலவிட்ட ஒருவன்போலும் இறைவன். எனவே, சரீர சம்பந்திகளாகிய ஆன்மாக்களை வினைவழியே ஆட்டுவிப்பவன் இறைவன் என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூது களவு கூடாநெறி

## விவசாயப் பட்டாளத்தின் இலக்ஷணங்கள் என்கிறார்கள் அநுராசபுர வாசிகள்

### விவசாய மந்திரிக்குக் கண்டனம்

விவசாய மந்திரி மிஸ்ரர் சேனநாயக்காவின் "செல்லப்பிள்ளை" ஸ்தாபனமாகிய விவசாயப் பட்டாளம் வெறும் கேலிக்கூத்து. இந்தப் பட்டாளத்தினர் எங்கு செல்லுகின்றனரோ, அங்கு அவர்களுடன் களவு, சூது, கூடாவொழுக்கம் என்பனவும் அங்கே அவர்களுடன் போகின்றன. மந்திரி சேனநாயக்காவின் விவசாயப் பட்டாளத்தைப் பற்றி அநுராசபுரத்தில் உள்ள பொதுமக்களின் அபிப்பிராயம் மேலே காட்டியவாறு ஆகும். இவ்வாறு அவர்கள் சமீபத்தில் நிகழ்ந்த ஒருபொதுக் கூட்டத்தில் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டனர்.

கோப்பைக்குளம் என்னும் இடத்தில் நில அபிவிருத்தித் திட்டத்தை ஊரவர்க்குப் பயன்பட விடாது, அதனை விவசாயப் பட்டாளத்தின் பொறுப்பில் விட மந்திரி சேனநாயக்கா நிச்சயித்தமையைக் கண்டிப்பதற்காக மேற்படி கூட்டம் கூட்டப்பட்டது. விவசாயப் பட்டாளத்தில் உள்ள ஒரு சாதாரண சேவகனைத் தாபரிக்க நாளொன்றுக்கு நாலரை ரூபா பிடிக்கிறது. ஆனால் இங்கேயுள்ள ஒரு கிராமவாசி அதே வேலையை இரண்டு ரூபாவுடன் செய்ய முடியும் என்றும், விவசாயப் பட்டாளத்துக்காக, மந்திரி பொது மக்களின நன்மையைத் தியாகஞ் செய்துவிட்டார் என்றும் இக்கூட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்டது.

இந்தப் பிரச்சினை விஷயமாக நம் விசேஷநிருபர் எழுதியுள்ள பின்வரும் கட்டுரை சமயோசிதமானது.

அநுராதபுரத்துக்கு மூன்று மைல்களுக்கப்பால் கோப்பக்குளம (ம்?) என்னும் இடத்தில் உள்ள காட்டை அழித்து விவசாயஞ் செய்வதற்கான முயற்சிகள் சென்ற இரண்டரை வருடகாலமாக நடைபெற்று வருகிறது. ஏறக்குறைய 700 ஏக்கர் வரை இங்கே பண்படுத்தப்பட்டிருக்கின்றது என அறிகிறோம். இப்படிப் பண்படுத்தப்பட்ட நிலத்தை அநுராதபுரத்தில் வாழும் மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்து அவர்கள் மூலமாக விவசாயத்தை விருத்தி செய்வது என்று முந்தி வடமத்திய மாகாணத்துத் தலைவராக விருந்த மிஸ்ரர் R அலுவிகாரை நிச்சயித்து அதற்கான சில ஏற்பாடுகளையுஞ்செய்தார். இப்படி நிலம் வாங்க இருந்தவர்களில் அரசாங்க உத்தியோகத்தரும் சிலராவர். குறித்த நிலங்களைப் பெற்றபின், அவற்றை நவீனமுறைப்படி பண்படுத்தி, ஐக்கிய முறையில் தொழில்விருத்திசெய்து நெல் விளைவை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதே ஒழுங்காக இருந்தது.

இந்த ஒழுங்கு, விவசாய மந்திரி மிஸ்றர் சேனநாயக்காவுக்கு இப்போது பிடிக்காமல் வந்துவிட்டது. கோப்பைக் குளத்திற் பண்படுத்தப்பட்ட நிலத்தை ஊரவர்க்குக் கொடுக்கக்கூடாது, அதிலும் விசேஷமாக அரசாங்க உத்தியோகத்தர்க்குக் கொடுக்கக்கூடாது என்று அவர் தீர்மானித்து விட்டார். கோப்பக்குளத்துக்கு அணித்தாகவுள்ள புளியங்குளத்தில் உள்ள விவசாயப் பட்டாளத்தினரிடம், இந்தக் கோப்பைக்குள விவசாய அபிவிருத்தி வேலையை ஒப்படைத்து விடுவதென விவசாய மந்திரி நிச்சயித்துவிட்டார். விவசாய மந்திரியின் இந்தத் தீர்மானம் ஒருபோதும் பயனளிக்க மாட்டாது என்பதே எமது திடமான நம்பிக்கையாகும்.

விவசாயப் பட்டாளத்தில் உள்ளவர்களுக்கும் விவசாயத்துக்கும் வெகுதூரமென்பதே விஷயம் அறிந்துள்ளார்களின் அபிப்பிராயமாகும். விவசாயப்பட்டாளம், இந்த நிலஅபிவிருத்தித் திட்டத்தைக் கையேற்று நாட்டுக்கு நன்மை தரக்கூடிய முறையில் கருமம் ஆற்றமுடியாது. இதற்குக் காரணங்கள் பலவுண்டு. முதலாவதாக, இந்தப் பட்டாளத்தில் உள்ளவர்களுக்கும் விவசாயத்துக்கும் வெகுதூரம். விவசாயமென்றால் என்ன என்று கேட்கும் சூரப்புலிகளே இப்பட்டாளத்திற் பெரும்பான்மையினராக இருக்கின்றனர் இரண்டாவதாக, இப் பட்டாளத்தினர்க்கு உதவப்படும் வேதனம் முதலியவை அபரிமிதமானவை. இப்பட்டாளத்திலுள்ள பேரதிகாரிக்கு தினமொன்றுக்கு 15 ரூபா வேதனம், அதிகாரிக்கு 10 ரூபா, பிரதம பரிசோதகருக்கு $7\frac{1}{2}$ ரூபா, சிரேட்ட பரிசோதகருக்கு 5 ரூபா, சாதாரண பரிசோதகருக்கு 4 ரூபா, ஓவர்சியருக்கு $2\frac{1}{2}$ ரூபா, ஓர் தொழிலாளிக்கு 1 ரூபா தொடக்கம் $1\frac{1}{4}$ ரூபாவரை வேதனமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த வேதனத்தைவிட, உடை, உணவு இருப்பிடம், வைத்திய வசதி என்பன யாவும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. இப்படியெல்லாம் வேதனம் கொடுத்து இத் திட்டத்தை லாபகரமாக நடத்தமுடியுமா என்று கேட்கிறோம். மூன்றாவது ஓர் விவசாயிக்கு வேண்டிய இலககணங்கள் ஒன்றாவது இந்தப் பட்டாளத்தினர்க்கு இல்லை. நேர்மாறாக, ஓர் விவசாயிக்கு வேண்டப்படாத இலக்கணங்கள் எல்லாம் இவர்களிடம் உண்டு என்று கூறினும் மிகையாகாது. இப்பட்டாளத்தினர் காற்சட்டை, மேற்சட்டையணிந்து பவனி செல்வதற்குத்தான் அதிக பயிற்சி அளிக்கப்பட்டிருக்கின்றனரேயன்றி, கொத்தலாவலை, சேனநாயக்கா, அபயவிக்கிரம முதலிய சிங்களத் தலைவர்கள் தம்மிடையே விஜயம்செய்யும் காலத்தில் அணிவகுத்து "ஜெயஸ்ரீ" கத்தப் போதிய பயிற்சி அளிக்கப்பட்டிருக்கின்றனரேயன்றி, மண்வெட்டி கொண்டு நிலத்தைக் கொத்தவோ, உழவோ, எருக்கட்டவோ, களை பிடுங்கவோ, நாற்று நடவோ, நீர்ப்பாய்ச்சவோ, போதிய, வேண்டிய பயிற்சி கொடுக்கப்படுகின்றிலர். இந்த விவசாயப் பட்டாளத்துக்கு என ஆண்டுதோறும் லட்சக் கணக்கான ரூபாய்களை, இலங்கை மக்கள் வாரிவாரி இறைக்கின்றனர்,

மேலே காட்டிய இலட்சணங்கள் பூண்ட விவசாயப் பட்டாளத்திடம், கோப்பைக்குள விவசாய விருத்திக் கருமத்தை மிஸ்ரர் சேனநாயக்கா ஒப்புவிக்க முன்வந்தமை ஏமாற்றத்துக்கும், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும் ஏதுவான ஓர் விஷயமாகும். ஓட்டவந்த பிடாரி ஊர்த் தெய்வத்தைத் துரத்தியவாறு, இப் பட்டாளம் இப்போது கருமம் ஆற்றியுள்ளது. இந்த விவசாயப் பட்டாளத்தின் திறமையைப் பற்றி மிஸ்ரர் சேனநாயக்காவுக்கு அப் பட்டாள அதிகாரிகள் உண்மை நிலையை விளக்காது புளுகியிருப்பதே மந்திரியின் தீர்மானத்துக்குக் காரணமாகும். அவர் கொண்டுள்ள தப்பபிப்பிராயத்தைப்போக்குவது அநுராசபுர வாசிகளின் கடமையாகும். விவசாயப் பட்டாளம் என்பது ஓர் வீண்ஸ்தாபனம் அதனால் நாட்டுக்கு எவ்விதமான நன்மையும் இல்லை என்பதை மந்திரிக்கு மக்கள் துலாம்பரமாக விளக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

## காரைநகர்ச் சைவ மகாசபை

காரைநகர்ச் சைவ மகாசபை காரைநகரில் தொடர்ச்சியான சைவப் பிரசாரங்கள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறது என அறிகிறோம்: இன்று (9-8-46 வெள்ளிக்கிழமை காரைநகர் வாரிவளவுப் பிள்ளையார் கோயில் மண்டபத்திலும் 26ந் தேதி சனிக்கிழமை மணற்காடு அம்மன்கோயில் மண்டபத்திலும், 27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முருகமூர்த்திகோயில் மண்டபத்திலும் தினசரி இரவு 6மணிதொடக்கம் "ஆலயவழிபாடு" என்னும்விஷயத்தில் முறையே திரு. ஆ. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அவர்களும் திரு வே. கந்தையா (சைவப் பிரசாரகர்) அவர்களும், திரு. அ சடாட்சரம் ஆசிரியர் அவர்களும் உபந்நியாசஞ் செய்வார்கள்.

## சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசையும் பிரசங்கமும்

மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாசாலையில் வியவருஷம் ஆடிமாசம் 20ந் திகதி (4 8 46) ஞாயிற்றுக்கிழமை பகல் மேற்படி நாயனர்குருபூசை மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது, இரவு 7 மணி தொடக்கம் திரு. ஏ. பொன்னையா அவர்கள் தலைமையிலே தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. ஆரம்பத்திற் பிரசாரகரவர்களைப்பற்றித் தலைமையாசிரியர் தக்க முறையில் வரவேற்றுபசரித்துச் சபையோர்க் கறிமுகஞ் செய்து வைத்தனர்,

அப்போது பண்டிதர் பிரமஸ்ரீ அ. சோமசுந்தர ஐயர் அவர்கள் ஷை நாயனர் சரித்திரத்தைப்பக்திச்சுவை நனிததும்பப் பல எடுத்துக்காட்டு விளக்கங்களமையச் சிறந்த சொற்பொழிவாற்றினர்.

பின்னர், திரு. மு. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களும், தலைவர் அவர்களும் சபையோர் இவை தமக் குறுதுணையாமெனப் போற்றுமாறு அரிய நுண் பொருள் பயக்குங் குறிப்புகளை எடுத்து விளக்கிக் காட்டினர். அதன்பின் தலைமைஆசிரியர் நன்றிகூறத் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

●

நிகழும் வியவருஷம் ஆடிமாசம் உ0 (4-8 46) ஞாயிற்றுக்கிழமை பகல், பன்னாலை திரு வீ இளையதம்பி அவர்களால் தமது சிவனடியார் திருமடாலயத்தில் ஷை சுவாமிகள் குருபூசையும், அன்னதானமும், தெல்லிப்பளை சேர் கனகசபை வித்தியாசாலை ஆசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்களால் ஷை சுவாமிகள் சரிதம் பக்கவாத்தியசகிதம் கதாப் பிரசங்கமும் செய்யப்பட்டன

## ருஷ்ய அநுதாபிகள் ஏகாதிபத்தியத்தில் இருக்கின்றனராம்

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் உள்ள ஓர் தொகைப் பிரசைகள் ருஷ்யாமீது மிக்க அநுதாபங்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் நாம்மிக்க சாவதானமாக நடக்கவேண்டும். இவர்கள் ருஷியாவின் இரகசிய ஒற்றர் என்று கூறினும் பொருந்தும்" என்று ஆஸ்திரேலிய நீதிபதியான மிஸ்ரர் கோர்ணிஷ் என்பவர், நியூஸிலந்தில் நிகழ்ந்த கூட்டம் ஒன்றிற கூறினர்.

## இலங்கைச் சட்டக் காரியதரிசி

இலங்கைச் சட்டக் காரியதரிசியாயுள்ள மிஸ்ரர் J. M H. கிஹில் ஆபிரிக்காக்கண்டத்தில் உள்ள கெனியா நாட்டின் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டுவிட்டார். புதிய பாராளுமன்றம் அமைத்து, மந்திரசபை வகுக்கப்படும்வரை நீதியரசர் றோஸ் என்பவரே சட்டக் காரியதரிசியாகக் கடமை பார்ப்பர்.

## உலகம்பலவிதக் கதை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யோசிக்கிறேன்; இல்லையேல் இந்தப் பார்ப்பானை இப்பொழுதே நாசஞ் செய்துவிடுவேன்; பயப்படாதே, நீ கேட்டபடி வரந்தந்தேன்" எனலும் அந்த அம்மாள் தூரத்தில் நின்றபடியே என்னைப் பஞ்சாங்கமாகவிழ்ந்து வணங்கினள்: ஐயரும் மனமுஞ் சரீரமும் பதறுதலின்றிச் சிந்தனையோடு நின்றார்; ஊரதிகாரியைச் சீற்றத்துடன் திருப்பிப்பார்த்து, "அடா, ஊரதிகாரி" என்று விளிப்பதற்கிடையில், அவன் மீண்டும் என் காலில் வீழ்ந்து கும்பிட்டு, "தாயே! உன்னடைக்கலம்" என்றிரந்தான்; எழுந்து நில் என்றவுடனே, ஊரதிகாரி எழுந்து கால்பதற, கைபதற மனம் பதற நின்றான்; ஏ, அதிகாரி, ஏ பிராமணா! இவளை என் பிள்ளையென்று மதித்துக்கொள்ளுங்கள்; இன்றுதொடக்கம் இவள்மீது நீங்களாக, வேறு யாராக, இச்சைகொண்டால், இவளுக்கு ஏதுந் தீங்கு நினைத்தால் பின்பு நான் பொறுப்பதுமில்லை, அப்படிச் செய்பவர்களை உயிருடன் உலகில் சஞ்சரிக்க விடுவதுமில்லை; எச்சரிக்கை! என்று சொன்னேன்; அந்த இடத்தில் அறிவு சோர்ந்து விழ்ந்தேன்; பின் நான் ஒன்றும் அறியேன்: வேறொன்றுமல்ல, ஆரம்பத்தில் நான் காளிதேவி போல் வேஷமிட்டு ஆவேசங்கொண்டவள்போல் நடித்தேன்; பின் அந்தத் தேவியின் ஆவேசம் என்னிடம் புகுந்து தன்வசமாக்கிவிட்டது.நான் ஆவேசம் நீங்கி அவசமுற்று விழ்ந்தவுடனே என் ஆத்தாளும் இலட்சுமியும் என்னைமெல்லத்தூக்கிக்கொண்டு போய்ப் படுக்கையில் கிடத்திச் சைத்யோபசாரங்கள் செய்து எனக்கு ஒருவாறு சுவய அறிவு வர, என் வேஷத்தைக் கழுவித் துடைத்து, அந்த உடையை மாற்றி எனக்கு இயல்பாகவுரிய உடையையும் ஆபரணங்களையும் தாங்களேபுனைந்து பூரண அறிவு வரச்செய்தார்களென்றும், பின்னரும் ஒருமணி நேரம் வரையிற் கிடந்து அசைவறத் துயின்றேன் என்றும அவர்களே பிறகு எனக்குச் சொன்னார்கள்; அதன்பின்னர் அந்த ஊரதிகாரி ஐயர் வீட்டுத் தலைவாசற்படியிற் கால்வைப்பதில்லை; ஐயரும்என் விஷயத்தில் மிகவும்சாவதானமாக நடப்பாராயினர்; ஐயர் அன்று நிகழ்ந்த விஷயத்தைத் தம்மிடத்தில் வருவோர் பலருக்கு வெளியிட்டார்; அந்தத் தாசி வீட்டிலும் போய் விஷயத்தைத் சொல்லிவிட்டார்; ஆத்தாள், இலட்சுமி இவர்களும் என்னளவில் மிக அவதானமாகவே நடந்து வருவாராயினர்; காளிதேவியின் கருணையால் ஒரு பெரிய ஆபத்தினின்றும் தப்பித்துக்கொண்டேன்,

(வரும்)

## சுபாஷ் போஸ் இறந்தே விட்டார்

சுபாஷ்சந்திரபோஸ், விமானவிபத்தில் அகப்பட்டு இறந்தமை உண்மை; அதைப்பற்றிச் சந்தேகப்பட வேண்டியது இல்லை என்று ஜப்பானிய ஆதிக்கத்தின்கீழ் பர்மாக் குடியரசின் தலைவராயிருந்த டக்ரர் பாமா கூறுகிறார். டக்ரர் பாமா இப்போது அமெரிக்கரால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

சேந்தமிழ் நாடேனும் போதினிலே
—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி ஆகஸ்ட் 10

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே வி ராமசாமி ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 மி என் விஜயராகவன் பாட்டு 8.30 சித்ர கானம் 9 முடிவு.

1 கே வி ராமசாமி ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 சர்வ கலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2.05 மி என் விஜயராகவன் பாட்டு 2.45 முடிவு.

மாலை: 5 சிதம்பரம் கே சோமசுந்தரம் அம்மாள் பாட்டு 5.40 திருவாசகத் தத்துவ விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.30 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சிதம்பரம் கே சோமசுந்தரம் அம்மாள் பாட்டு 7-15 புள்ளிவிவர பதிப்பேச்சு 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி (ஜி என் பாலசுப்பிரமணியம் பாட்டு) 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஞானம்மாள் பாலகிருஷ்ணன் பாட்டு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 இலகு இசை 10 30 முடிவு.

### ஞாயிறு ஆகஸ்ட் 11

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருக்கண்ணபுரம் ஸ்ரீனிவாசபிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு

12 வால்மீகி இசைத்தட்டுத் தொகுப்பு 12-30 புகர் மக்கள் நாடகம் 12-45 சென்ற நாட்கள் இசைநாடகம் 1 சிறுவர் குழு 1-20 மீனலோசனி வாத்திய பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாசா பக்கம் 2 தமிழில் செய்திகள் 2 05 இசைச் சதயம 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை: 5 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 5-40 தேவார சபை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருப்பாப்புரம் என் சிவசுப்ரமணியபிள்ளை பட்டு 7-15 சேனைக்கு வரம்பு பேச்சு 7.30 தமிழில் செய்திகள் 7-45 மன்னார்குடி கே சாவித்தரி அம்மாள் கோட்டு வாத்தியம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஏன பல ளிகொண்டராமா நடனப் பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 திருப்பாம்புரம் என் சுவசுப்ரமணியபிள்ளை பாட்டு 10-30 முடிவு.

### திங்கள் ஆகஸ்ட் 12

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மதுரை ஐ எம் மாசனி சாஹிப் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருநெய்த்தானம் இசைத் தொகுப்பு 8-30 என் ராமசாமி பாட்டு 9 முடிவு.

1 காம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எ ஸ்ரீனிவாசராகவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-5 ஏ ஸ்ரீனிவாசராகவன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 மதுரை ஐ எம் மாதுசனி சாஹிப் நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் எஸ் கிருஷ்ணன் கோஷ்டி இசைத் தட்டு 7 15 தாளவாத்யக் கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 செம்மங்குடி வைத்தியநாத பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வயோலா, தில்ரூபா 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10-30 முடிவு.

### செவ்வாய் ஆகஸ்ட் 13

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 டி பி சிவசங்கரன்பிள்ளை புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 மதுரை பொன்னுசாமி இசைத் தட்டு 8.30 பி லப்போதர பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 சதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பி லம்போதர பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி லம்போதர பாகவதர்பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 வி ஏ நாராயணன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 விவசாயச் செய்திகள் பேச்சு 7.30 தமிழில் செய்திகள் 7-45 உழவரும் அறிவும் 8 நாடகம் டி பி சிவசங்கரன்பிள்ளை புல்லாங்குழல் 8-30 வி ஏ நாராயணன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் கே சுமதி பாட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

---


## குடை மார்க்ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

### கல்க்கற் ஒடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினல் உடையாது. மழையினல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செதய் ஆராய்ச்சியின் பயனுவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஏஜென்ஸ்'

ஜே. செரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3— 12-9(வெ)



## தந்தரோகசஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
### சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46— 25-10-46 (வெ)



## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிப்போல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.


ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
காலருத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)






எங்கும்
கியாதிபெற்ற
எமது
ரேடியோ பீடிகளையே
எப்பொழுதும்
உபயோகித்து
ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:
எல்லாஊர்களிலும் கிடைக்கும்
மொடேண் ஏஜென்சீஸ்,
சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)


## இலங்கை மக்கள் தயாராயிருக்கின்றனரா

—

1-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டிய கைங்கரியங்களை நாம் செய்துவிட்டு இருக்கப் பூரண சுயராச்சியந் தானுகவே வந்து எம்மை அடையும் என்பது நிச்சயம். இப்படி எல்லாம் நாம் செய்து எங்கள் நாட்டை மேநிலைப்படுத்துவதற்கு முதலில் எமக்கிடையே — சிங்களர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் என்னும் இலங்கை வாழ் மக்களுக்கிடையே — பூரணமான ஒற்றுமை நிலவவேண்டும். இந்த ஒற்றுமையில்லாவிட்டால் எம்நாடு ஓர்போதும் முன்னேற்றம் அடைய முடியாது. எனவே இலங்கையின் முன்னேற்றத்திற் சிரத்தை கொண்டுள்ள தலைவர்கள் என்றிருப்போர், இந்த ஒற்றுமையை வளர்ப்பதில் தம் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

○

**ஒற்றுமை இல்லை**


இன்று இலங்கையின் நிலைமை என்ன? இந்தச் சிறிய இலங்கையில் வதியும் இரு பிரதான சாகியத்தார்களுக்கிடையே பூரணமான லட்சிய ஒற்றுமை உண்டா? துர் அதிர்ஷ்டவசமாக, அது இல்லையென்றே கூறவேண்டும். ஒற்றுமை வளரவேண்டியதற்குப் பதிலாக, பாராளுமன்றத் தேர்தல்கள் நெருங்க நெருங்க, வகுப்பு வேற்றுமை அதிகம் அதிகமாக வளருமென்றே அஞ்சவேண்டியிருக்கிறது, இலங்கையின் சுயராச்சியத்திற்குத் தமிழர் முட்டுக்கட்டையாக நிற்கிறார்கள் என்று சிங்களமக்களிடையேயும், சிங்களர் சர்வாதிகாரம் செலுத்தித் தம்மை நசுக்கக் கங்கணங்கட்டி நிற்கின்றனர் என்ற எண்ணம் தமிழ் மக்களிடையேயும் துர் அதிர்ஷ்ட வசமாக இப்போது சிலகாலமாகத் தோன்றியிருக்கிறது. இதற்குப் பொறுப்பாளிகள் இருசமுகங்களிலுமுள்ள தலைவர்கள் என்றிருப்போரே என்று கூறின் பிழையாகாது. கேவலம் பதவி வேட்டை ஒன்றினையே லட்சியமாகக் கொண்டுள்ள தலைவர்கள் இந்த இலங்கையில் சர்வாதிகாரத்தர்பார் நடாத்த இலங்கை மக்கள் விட்டதன் பலன் இது.

---


விளம்பரமின்றேல்
பெருப்பணமில்லை



## மிகச் சிறந்த புதிய ஆர்மோனியங்கள்



விலைக்கிருக்கின்றன
எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்
சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்
கல்கத்தா மோகன புளுட் ஆர்மோனியக் கொம்பனி,
484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(Mis 98 28 6—28-9) (வெ)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday August, 9, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org